பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 24 புதன்கிழமை 11.10.2023 அதிர்வு 72

## அமைச்சர் ஜீவன் ஜெனிவா பயணம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு

04



# ‘மொட்டு’ வழியில் ரணில்



## இப்படிக் கூறுகின்றார் பஸில்

- சுடர் திலீபன் -

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வழியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணிக்கின்றார். அவருக்கு நாம் அனைவரும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் கட்சியின் உறுப்பினர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போதே பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

”எமது கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றவர்கள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவைவிமர்சிக்கலாம். அவரை நாம் ஏன் விமர்சிக்க வேண்டும்?

நடைமுறையில் இருப்பது எமது அரசு. எமது அரசில் இணைந்துதான் ஜனாதிபதி பதவியை ரணில் பொறுப்பேற்றார்.

04

### புலமைப் பரிசில் பரீட்சை எழுதவிருந்த

## மாணவி ஒருவர் விபத்தில் சாவு!



எரிபொருள் பௌசர் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மீது மோதி இடம்பெற்ற விபத்தில் 10 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், தலாவ பிரதேசத்தில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 5 இல் கல்வி கற்கும் டபிள்யூ. நிசல்யா நெத்சரணி விமலசேன என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

04

## விபத்தில் படுகாயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் மரணம்

கனகராசா சரவணன் -



மட்டக்களப்பு, வவுணதீவுப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலையத்தில்

04

## யாழில் இளைஞரைத் தாக்கிக் கொள்ளை; மூன்று பெண்கள் உட்பட 6 பேர் மறியலில்!



- தென்மராட்சி நிருபர் -

இளைஞர் ஒருவரைத் தாக்கிப் பணம் உள்ளிட்ட 10 இலட்சம் பெறுமதியான பொருட்களைக் கொள்ளை-யடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி சந்தேகநபர்கள் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு இளைஞர் ஒருவரை மறவன்புலவு பகுதிக்கு வரவழைத்துள்ளனர்.

04

# தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய மூவர் நேற்று கைது

## பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு தீவிர விசாரணை




தமிழகக் கடற்றொழிலாளர்களின் படகின் மூலம் சட்டவிரோதமாக இலங்கை திரும்பிய மூவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் போர் நடைபெற்ற போது 1990 ஆம் ஆண்டு யாழ். வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கைச் சேர்ந்த தாயாரும் அவரது ஆண் பிள்ளையும், பெண் பிள்ளையும் தமிழகத்துக்குச் சென்று சென்னையில் 30 வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

அந்நிலையில், சென்னையில் தொடர்ந்து வாழ முடியாத நிலையில் மூவரும் தமிழகக் கடற்றொழிலாளர்களின் உதவியுடன் படகு மூலம் யாழ். வடமராட்சி கிழக்கு – குடத்தனைப் பகுதியில் வந்திறங்கி உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# அலி சப்ரி ‘குட் பாய்’

## அரசியல் வேண்டாமாம்



“அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடப்போவதில்லை. எனது அரசியல் பயணம் ஒரு தடவைக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.”

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“அரசியல் எனக்கு அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. அடுத்த தேர்தலில் போட்டியிடமாட்டேன். அழைப்புகள் வந்தாலும் அதனை ஏற்கும் நிலையில் இல்லை. எனது தொழில்சார் நடவடிக்கையை முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளேன்.

அரசியலுக்கு வந்து ஒரு சதம்கூட சம்பாதித்தது கிடையாது. அதற்கான தேவைப்பாடும் எனக்கு இல்லை. எனது குடும்பத்தாரும் நான் அரசியலில் ஈடுபடுவதை விரும்பவில்லை.

நெருக்கடியான நேரத்தில் நாட்டை விட்டுச் செல்ல முடியாது. அதனால் தான் நெருக்கடியான காலகட்டத்தில் நிதி அமைச்சுப் பதவியைக்கூட ஏற்றேன். கடந்த வருடம் மே 9 ஆம் திகதிக்குப் பிறகு அரசியல் முழுமையாக வெறுத்துவிட்டது.” – என்றார்.



# வடமராட்சியில் கைக்குண்டுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் நெல்லியடி பொலிஸார் நேற்று மேற்கொண்டவிசேடநடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் அந்த நபருக்குத் தொடர்பு இருக்கின்றது எனவும், வவுனியாவைச் சேர்ந்த அந்த நபர் நீண்ட காலமாகத் துன்னாலைப் பகுதியில் வசித்து வந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 28 வயதுடைய சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரைப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை, அல்வாய் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தென்னையில் இருந்து தவறி விழுந்தவர் சாவு!

சீவல் தொழில் செய்வதற்காகத் தென்னை மரத்தில் ஏறிய தொழிலாளி தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது 64) எனும் தொழிலாளியே உயிரிழந்துள்ளார்.

அந்தத் தொழிலாளி கடந்த 6ஆம் திகதி தவறி விழுந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால்

# 261 பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கல்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால், வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு திங்கட்கிழமை (9) அம்பாறை ஹார்டி உயர்கல்வி நிறுவக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் 261 பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதன் போது புலமைப் பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்குத் தலா 20 ஆயிரம் ரூபாவும் க.பொ.த. உயர்தர பிள்ளைகளுக்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




# உளநல தின நிகழ்வுகள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் உளநல தின நிகழ்வுகள் நேற்று (10) இடம்பெற்றது.

சர்வதேச உளநல தினமான நேற்று இந்த நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையினுடைய பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் வைத்தியசாலை வைத்தியர்கள் வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர் .

கிளிநொச்சி மாவட்டத்தின் உளநல செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்த உளவளத் துணையாளர்கள், உளநல வைத்தியர்கள், தாதியர்கள் இதன் போது மதிப்பளிக்கப்பட்டனர்.

இதில் வைத்தியசாலையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், தாதியர்கள், பொதுமக்கள், மதகுருமார் என பலர் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் மரதன் ஓட்டம்: விண்ணப்பங்கள் கோரல்!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட மெய் வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்,பெண் இருபாலாருக்குமான மாபெரும் மரதன் ஓட்ட நிகழ்வு ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவ, மாணவிகள், விளையாட்டு கழக உறுப்பினர்கள், விளையாட்டு அமைப்புகள் உட்பட பலர் பங்கு பற்றும் வகையில் இந்த மரதன் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மரதன் ஓட்ட நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா பணம் பரிசு சான்றிதழ் மற்றும் வெற்றிக் கிண்ணம், இரண்டாம் இடத்தை பெறுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பணம் பரிசு சான்றிதழ் வெற்றிக் கிண்ணம், மூன்றாம் இடத்தை பெறுபவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணம் பரிசு சான்றிதழ் மற்றும் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் ஆவணங்களுடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## முதியோர் தின நிகழ்வுகள்

கம்பர்மலை யூ.கே. பவுண்டேசன் ஆதரவில் கரவெட்டிப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் முதியோர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் தி.வரதராசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ. தயாரூபன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யூ.கே. பவுண்டேசன் கம்பர் மலை இணைப்பாளர் சு.சுசீலன், கரவெட்டிப் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் சு. ரவிகரன் ஆகியயோர் கலந்து கொள்வர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அமைச்சர் ஜீவன்...**

வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சுவிஸ் தலைநகர் ஜெனிவாவுக்கு இன்று பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

உலக நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் ஜெனிவா செல்கின்றார். ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையே இக்கூட்டம் நடைபெறும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹறித்த விக்கிரமசிங்கவும் அமைச்சருடன் ஜெனிவா செல்கின்றனர்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளரையும் இந்த விஜயத்தின்போது சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இதன்போது 'மலையகம்-200' நிகழ்வு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**மாணவி ஒருவர்...**

இந்த மாணவி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கு முகம்கொடுக்கவிருந்த நிலையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பரிதாகாரமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பு – சபுகஸ்கந்த பகுதியில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த எரிபொருள் பௌசர், தலாவ நகர சுற்றுவட்டத்தில் தெற்கிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் உயிரிழந்த மாணவியும், அவரது தாயும் பயணித்துள்ளனர்.

படுகாயமடைந்திருந்த நிலையில் இருவரும் தலாவ பிரதேச வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது மாணவி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் பௌசர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தலாவ பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**விபத்தில் படுகாயமடைந்த...**

நீதிமன்றப் பிரிவில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த நாற்குடா பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சப் இன்பெக்டர் சபேசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த சனிக்கிழமை வவுணதீவிலுள்ள தனது பண்ணைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வவுணதீவுப் பகுதியில் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டதையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியிருந்தார்.

**மொட்டு வழியில் ரணில்...**

எமது கட்சியினதும் எமது அரசினதும் வழியில்தான் அவர் பயணிக்கின்றார். எனவே, ஜனாதிபதிக்கு நாம் அனைவரும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும்.

எந்தத் தேர்தலுக்கும் எமது கட்சி தயாராக இருக்கின்றது என்பதை நாம் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனியாக நின்று எதிர்கொள்ளும். எம்முடன் எவரும் கூட்டுச் சேரலாம். கட்சியை விட்டு வெளியேறிச் சென்றவர்களை மீண்டும் அழையுங்கள். மொட்டுவின் கதவு திறந்துள்ளது என்பதை அவர்களிடம் தெரிவியுங்கள். பழையவர்கள் அல்லது புதியவர்கள் எவர் வந்தாலும் அவர்களைக் கட்சியில் இணைத்துக்கொண்டு நாம் பயணிக்க வேண்டும். கட்சியை மென்மேலும் நாம் பலப்படுத்த வேண்டும்." – என்றார்.

# யாழில் இளைஞரைத் தாக்கிக் கொள்ளை; மூன்று பெண்கள் உட்பட 6 பேர் மறியலில்!



**முதலாம் பக்கத் தொடர்ச்சி...**

அங்கு இளைஞரைத் தாக்கி அவரிடமிருந்த நான்கரைப் பவுண் தங்க நகைகள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், கைக்கடிகாரம் உள்ளிட்ட 10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும், அவரிடமிருந்த இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிலாபத்தைச் சேர்ந்த 3 பெண்களும், கனகராயன்குளத்தைச் சேர்ந்த இரு ஆண்களுமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நகைகளைக் கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த கடை உரிமையாளர் அவற்றை உருக்கி தங்கத் தட்டுகளாக மாற்றிய நிலையில் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் 6 சந்தேக நபர்களையும், சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியபோது அவர்களை 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



# சாவகச்சேரியில் பயிற்சி பெற்றோருக்கு முறைமைசார் தொழில் நுட்பச் சான்றிதழ்

(த.சுபேசன்)

முறை சாரா தொழிலாளர்களுக்கு முறைமை சார் தொழில் நுட்ப தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கலந்து சிறப்பித்திருந்தார்.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சிவஞானம், ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி தோமஸ், தேசிய பயிலுனர் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் அமரசேகர, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலா ளர், மாகாண அமைச்சின் செயலாளர் கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றியிருந்தனர். இதன்போது வடக்கு மாகாணத்தில் முறைமை சார் தொழிற் பயிற்சியைப்பெற்ற 575 பயனாளர்களுக்குதகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி நெறியானது ஐ.எல்.ஓ. சர்வதேச நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதல்களுக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணில் விடும் பலூன்கள்

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு அதிகாரத்தில் இருக்கக் கிடைத்த வாய்ப்பை மேலும் ஐந்து வருடங்களுக்குத் தொடரக்கூடியதாக மாற்றுவதற்கு எல்லா வகையிலும் முயற்சிக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க - மக்கள் ஆதரவின்றி அதனை முன்னெடுக்க முடியாது என்ற விவரம் புரியாமல்.

அதற்காக அவ்வப்போது பல்வேறு யோசனைகளை - திட்டங்களை - தந்திரங்களை - அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றார், ஏதாவது ஒன்று தம்மை அதிகாரத்தில் தொடர வாய்ப்பு அளிக்காத என்ற நப்பாசையில்.

கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது என்பதில் இருந்து ஆரம்பித்தது அவர் இவ்வாறு விடும் பலூன்கள்.

தீர்வுத் திட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேசி இணக்கம் காணுவது என்ற பெயரில் சர்வ கட்சிக் கூட்டங்களை கூட்டியதும் அவர் பறக்க விட்ட இத்தகைய பலூன்களில் ஒன்றுதான்.

நாடாளுமன்ற இணக்கத்துடன் 13 ஆவது அரசமைப்பு திருத்த நடைமுறையாக்கம் என்ற பெயரில் நாடாளுமன்ற விவாதம் நடத்தியமையும் கூட அத்தகைய கயிறுகளில் ஒன்றே.

ஒன்றும் சரி வராத பின்புலத்தில் இப்போது புதுக் கயிறு ஒன்றை அவிழ்த்து விடுகிறார். வரும் ஆண்டுடன் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்து, நேரடியாக நாடாளுமன்ற ஆட்சி முறையை மீளக் கொண்டு வருதல் என்ற பலூன்தான் அது. தன் கை விட்டுப் போகக்கூடிய நிறை வேற்றதிகார ஜனாதிபதி பதவியை, அப்படியே வேறு ஒருவருக்குக் கைமாற அனுமதிக்காமல், அதையே - அந்தப் பதவி நிலையையே - இல்லாமல் செய்து விட்டு, தற்போதைய நாடாளுமன்றம் மூலம் அதிகாரத்தைத் தொடர்ந்து தாமே பிரயோகிப்பதுதான் அவரின் தற்போதைய கடைசித் திட்டம்.

ஆனால், அதற்கும் முற்கூட்டியே உஷாராக இருந்து பிரதான எதிர்க்கட்சிகள் ஆப்படித்து விட்டன.

எது, எப்படி என்றாலும் நிறைவேற்றதிகார ஆட்சி முறையை ஒழிப்பது என்றால், அதற்கு அரசமைப்புத் திருத்தம் அவசியம். அத்தகைய அரசமைப்பு திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. இன்றைய நிலையில் அதற்கு எதிர்க்கட்சிகளின் முழு ஒத்துழைப்பு அவசியம். எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காவிட்டால் அந்தத் திட்டத்தை முன் கொண்டு செல்ல முடியாது. ‘நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பது நல்லதுதான். அதற்கு நாம் ஆதரவு தர முடியும். ஆனால் அது நடக்கின்ற ஒரே சமயத்தில் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும்’ - என பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. ஆகியன கூறிவிட்டன. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலைப்பாடு அப்படித்தான் இருக்கும் என எதிர்பார்க்கலாம். இத்தகைய ஒரு பின்புலத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் அதேசமயம் நாடாளுமன்றத்துக்கும் இடைக்கால பொதுத் தேர்தல் நடத்தும் திட்டத்திற்கு ரணில் இனங்கார் என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும்.

ஆகையினால் ரணிலின் இப்போதைய இந்தத் திட்டமும் சரி வரப்போவதில்லை என்பது தெளிவு.

## மின் கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்த முடிவு!

மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைவாக இம்மாதம் முதல் மின்கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்க முடியும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (10) இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்துள்ளார்.

கட்டணத்தை உயர்த்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் முதல் இந்த திட்டம் நடைமுறைக்கு வரும் என்று குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

பொதுப் பயன்பாட்டுச் சட்டத்தின்படி பொது மக்களின் கருத்துகளைப் பெற 21 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இம்மாதம் 18ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மக்களின் வாய் மூலம் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னரே அனுமதி வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆயிரம் மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்க நடவடிக்கை

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை றோட்டரிக் கழகம், ஆஸ்ரேலிய அமைப்பு ஒன்றின் அனுசரணையுடன் 1000 மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கவுள்ளது.

கண்ணாடிக்கான தேவையிருந்தும் அதனைப் பெற்றுக் கொள்ள வசதியில்லாத வறுமைக் கோட்டின் கீழ் இருப்போருக்கு இக்கண்ணாடிகள் வழங்கப்படும் என்று கல்முனை றோட்டரி கழகப் பிரமுகர் றோட்டரியன் மு. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

ஏற்கனவே கண் பரீடசித்து மருத்துவச் சிட்டை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவேலைத்திட்டமானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26,27 ஆம் திகதிகளில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் ஆஸ்ரேலிய வைத்தியர்களால் கல்முனை கண் வைத்தியர்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்படும்.

இந்த வேலைத் திட்டம் குறிப்பாகக் கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் பரவல் அதிகரிப்பு

பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் வேகமாக பரவி வருகிறது என்று வலயக் கல்வி அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு வலய பணிப்பாளர் பி.ஆர். தேவபந்து அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் கடிதம் அனுப்பி இது தொடர்பில் எச்சரித்துள்ளார்.

கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால், உடனடியாக பாடசாலை மருத்துவ அலுவலர் அலுவலகத்துக்குத் தகவல் தெரிவித்து பரிந்துரைகளை பெற வேண்டும் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலையில் கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் அவர்கள் மற்ற மாணவர்களிடமிருந்து தனித்தனியாக வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சேவை நலன் பாராட்டு விழா

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை கல்வி வலயத்தின் காரை தீவு கோட்டப் பாடசாலைகளில் அதிபர்க ளாக சேவையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற அதிபர்களின் சேவையைப் பாராட்டும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

காரைதீவு கோட்ட அதிபர்கள் சங்கத் தால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா காரைதீவு இராமகிருஷ்ண மிசன் பெண்கள் பாடசாலையில் அதிபர் எம் . மணிமாறன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹ்துல் நஜீம், கௌரவ அதிதி களாக வலயக் கல்வி அலுவலக கணக் காளர் வை. ஹபீபுள்ளாஹ், காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜே.டேவிட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாளிகைக்காடு அல்– ஹுசைன் வித்தியாலயத்தில் 30 வருடங்களுக்கு மேலாக அதிபராக கடமையாற்றி அண் மையில் ஓய்வு பெற்ற ஏ.எல்.எம்.ஏ நளீர் மற்றும் இடமாற்றலாகிச் சென்ற மாவ டிப்பள்ளி அல்–அஸ்ரப் மகா வித்தியா லய முன்னாள் அதிபர் எச்.எம்.எம். அனீஸ், காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூ ரியின் முன்னாள் அதிபர் வீ.சந்திரேஸ் வரன் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.





# அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் நிகழ்வுகள்

(பழுவூரான்)

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிரதம தபாலகம் ஏற்பாடு செய்த சர்வதேச அஞ்சல் தின விசேட நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (10) இடம் பெற்றது.

மட்டக்களப்பு பிரதம தபாலக தபாலதிபர் மயில்வாகனம் ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெகன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் இவ்வருடத்தில் தபால் சேவையை மேலும் வலுவூட்டும் பொருட்டு பணியாளர்கள், தபால் உத்தியோகத்தர்கள் அடங்கலாக சத்திய பிரகடனமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து வீதியால் பயணித்த மக்களுக்கு சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பால் சோறு மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் மட்டக்களப்பு அஞ்சல் போதனை நிலையத்தின் பிரதம போதனாசிரியர் சோமசுந்தரம் நரேந்திரன் உள்ளிட்ட தபாலதிபர்களும் கலந்து கொண்டனர்.

# நூராணியா மயானத்தில் சிரமதான நடவடிக்கைகள்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாடு திட்டத்தின் கீழ் கல்முனை நூராணியா மயானம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை (10) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இது இடம்பெற்றது.

மாநகர சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், எம்.எம்.நிஸார் மற்றும் மேற்பார்வையாளர்கள் சிரமதானப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி யின் விஷேட ஆலோசனை, வழிகாட்டலில் நடை முறைப்படுத்தப்படும் இவ்வேலைத் திட்டம் கல்முனை தமிழ் பிரிவு இந்து மயானத்தில் சில தினங்களுக்கு முன் னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வேலைத்திட்டம் மருதமுனை, சாய்ந்தமருது மற் றும் நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளிலும் முன்னெடுக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# கிராமப்புறப் பாடசாலைக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

திருகோணமலை றோட்டரி கழகத்தால் , திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய கிராமப்புறப் பகுதியில் உள்ள பாடசாலைக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை றோட்டரி கழகத்தின் தலைவர் எஸ்.சௌந்தரராஜன், றோட்டேரி கழக அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விழாவுக்கு பாடசாலை அதிபர் தலைமை வகித்தார். திருகோணமலை றோட்டரி கழகத்தின் தலைவர் எஸ். சௌந்தரராஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்

றோட்டரி கழக அங்கத்தவர்கள் ஒரு லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை. பாடசாலையின் தரம் 1 முதல் 9 வரை உள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தத் திட்டததுக்காக ஆஸ்திரேலி யாவைச் சேர்ந்தவர்கள் நிதியுதவி செய்திருந்தனர்.



# தென்மராட்சி கடற்தொழிலாளர்களுக்கு நன்கொடையில் மண்ணெண்ணெய்

(த.சுபேசன்)

சீன அரசின் நன்கொடை மூலம் தென்மராட்சி கடற்தொழில் சங்கங்களைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களுக்கு இலவசமாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மீனவர்களுக்கான மண்ணெண்ணெய்யை வழங்கினார்.

நிகழ்வில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கடற்தொழிலாளர்களுக்கு தலா 78 லீற்றர் என்ற அடிப்படையில் உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.







# சுகாதார மேம்பாடுகள் தொடர்பான செயலமர்வு

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய பணிமனைக்கு உட்பட்ட சுகாதார நிறு வனங்களின் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால், பாடசாலை சுகாதார கழகங்களில் உள்ளவர்களுக்கு சுகாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று (10) சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.பீ.முஹம்மட் சில்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால், பிராந்திய பொதுச் சுகாதார மற்றும் தர முகாமைத்துவ பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, வாய்ச் சுகாதார வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எச்.கே.சரூக், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

பாடசாலைகளில் உள்ள சுகாதார கழகங்களை ஒழுங்கமைத்து அதனை வலுவூட்டி மாணவர்கள் மத்தியில் சுகாதார பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

கோட்ட மட்டத்திலான பாடசாலை சுகாதார கழக மேம்பாட்டுக் குழு ஒன்றும் இதன்போது தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் குழு மாதாந்தம் ஒன்று கூடித் தொடர் செயற்பாடுகளை முன்னெடுக்கவும்தீர்மானிக்கப்பட்டது. பாடசாலை சுகாதார கழகங்களை மேம்படுத்தும் நோக்கில் தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்தியத்தின் முதலாவது நிகழ்வு நாவிதன்வெளிப் பிரதேசத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# யானை வேலி அமைத்தாலும் கட்டுப்படுத்த முடியவில்லை

## யானைகளது அட்டகாசம் அதிகரிக்கிறது என்று கலாநிதி விஜயமோகன் தெரிவிப்பு

(பாலநாதன் சதீஸ்)

இலங்கையில் 4 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் யானை வேலி காணப்படுகின்றது. இலங்கையில் பல இடங்களில் யானை வேலிகள் போடப்பட்டாலும் அனேகமாக நடைமுறைப்படுத்தப்படாமைக்கு காரணம் மக்கள் அதனை பராமரிப்பதில்லை. அரசின் சொத்து அரசு செய்தது. ஆகவே அரசுதான் பார்க்கவேண்டும் என்று நினைத்து மக்கள் அவற்றைச் சரியாக கவனிப்பதில்லை. அதுமட்டுமன்றி யானை வேலைகள் அமைக்கப்படுகின்ற போதும் அவற்றைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. யானைகளது அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இவ்வாறு வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகன் உருவாக்கத்தில் இலங்கையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட யானை வேலி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மன்னாகண்டல்அ.த.க.பாடசாலையைச் சுற்றி அமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வனவிலங்கு சம்மந்தமான கலாநிதி பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட கலாநிதி விஜயமோகன்




இலங்கையில் வனவிலங்கு சம்மந்தமான துறையில் ஆர்வம் கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த விடயம் தொடர்பில்' அவரல் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையில் யானை மனித மோதல் என்பது பலகாலமாக இருக்கும் பிரச்சினை அரசால் மாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

யானை புத்தி கூர்மையான விலங்கு. அவை அமைக்கப்படும் வேலிகளை இலகுவாக உடைப்பதால் புதுவிதமான வேலியை அமைக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளோம்.

வேலியின் அமைப்பை மாற்றி அமைத்தால் யானை மனித மோதலை தவிர்கலாம் என்ற அமைப்பில் தொங்கு வேலி என்ற வடிவமைப்பை 2016 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் அறிமுகம் செய்தோம்.

இதனை தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு இந்திய அரசு தங்களுக்கும் இதனை அமைத்து தருமாறு கேட்டதற்கு இணங்க அங்கு சென்று அமைத்து கொடுத்தேன். இந்தியாவின் அசாம், கருநாடக, தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் 2000 ஆயிரம் கிலோ மீற்றர் வரை தொங்கு வேலியை அமைத்துள்ளார்கள்.

இந்த தொங்கு வேலியில் மாற்றம் பெற்று ஐ வடிவ தொங்கு வேலியை நான் புதிதாக வடிவமைத்துள்ளேன்.

இது முதன் முறையாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மன்னாகண்டல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வேலி யானைகளுக்கு மட்டுமான வேலி மற்றைய விலங்குகளுக்கான வேலி அல்ல. மக்களுக்கு அது தடுப்பாக அமையாது வழக்கமாக வன விலங்கு இலாகாவால் போடப்படும் குறுக்கு வேலி விலங்குகள் மக்கள் அனைவருக்கும் ஆனது.

குறுக்கு வேலி அதிக செலவில் அமைக்கப்பட்டது தொங்கு வேலி அப்படியல்ல செலவு குறைவு. யானை புத்தி கூர்மையுடையது இந்த வடிவமைப்பையும் யானை உடைக்குமாக இருந்தால் இதற்கு அடுத்த கட்டம் என்ன செய்யலாம் என்பது தொடர்பில் ஆராய்வோம்.

மனித யானை முரண்பாடு என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. மக்களின் பங்களிப்பு, ஒத்துளைப்பு இல்லாமல் எதுவும் செய்யமுடியாது. இந்தத் தொங்கு வேலி பராமரிப்பு மிகவும் குறைவு. இதனை இந்த கிராம மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இது தொடர்பில் எங்கள் கண்காணிப்பு தொடர்ச்சியாக இருக்கும் .–என்றார்.

# திருகோணமலையில் ஒருங்கிணைப்புக் கூட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (10)இடம் பெற்றது.

மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரய்ச்சியின் ஏற்பாட்டில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரள, ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றது.

இதில் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க உட்பட்ட பிரதேச செயலர்கள், அரச உயரதிகாரிகள், முப்படைகளின் உயரதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.









# பூகோள சூடேற்றமும் பச்சை வீட்டு வாயுக்களும்

இயற்கையுடன் இயற்கையாக அன்று வாழ்ந்த மனிதனை விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப முன்னேற்றம், புதிய கண்டுபிடிப்புகள் என்பன இயற்கைக்கு எதிராக மாற்றிவிட்டன. தொழிற்சாலைகள் அதிகரித்தன, வாகன போக்குவரத்து அதிகரித்தது, கைத்தொழில் புரட்சி வெடித்தது அதன் விளைவாக காபனீரொட்சைட்டு செறிவு அபரிமிதமாக வளிமண்டலத்தில் திரட்சி அடைய உலகளாவிய ரீதியில் வெப்பநிலை அதிகரித்தது. புவி வெப்பநிலை அதிகரித்தல் இன்றைய சந்ததியினருக்கு புதிய சவாலாக அமைந்துள்ளது.

புவி வெப்பநிலை 10 வருடங்களுக்கு ஒரு முறை 0. 1 பாகை செல்சியஷால் அதிகரித்து வருகின்றது. அடுத்து வரும் பத்து ஆண்டு காலப் பகுதியில் இந்த அதிகரிப்பு 1.4பாகை செல்சியஷ் தொடக்கம் 5.85பாகை செல்சியஷாக உயரும் என்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர்.

துணைக்கோள்கள், ஆர்டிக் வட்டாரத்தைக் கண்காணித்து பூகோள சூடேற்ற தாக்கத்தை மெய்ப்பித்திருப்பதுடன் அடுத்துவரும் நூறு ஆண்டுகளில் முந்தைய காலத்தை விட எட்டு மடங்கு வேகத்தில் வெப்பச்சீற்றம் ஏற மிக வாய்ப்பு உள்ளது என திடுக்கிடும் தகவல் ஒன்றையும் தந்திருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் கடல் மட்டம் 3 மில்லி மீற்றர் இனால் அதிகரித்து வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதல் துருவப் பனிப்பாறைகள் ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவீதம் கொள்ளளவு விதத்தில் உருகி வருகின்றன. மேலும் அமெரிக்காவில் 2005 ஆம் ஆண்டில் அடித்த ஹறீனா , ஹறிக்கேனல் கடலும் நீர் வெள்ளமும் மீறி மூழ்கிய நியூ ஆர்லியன்ஸ் நகரைப் போல அகில நாடுகளில் உள்ள 15 பெரிய நகரங்களில் 11 நகரங்கள் கடற்கரையிலேயே உள்ளன. அத்துடன் உலகில் 70 வழுத மான மக்கள் கடற்கரைப் பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

300 ஆண்டுகளாக கனடாவில் வடகோடி ஆர்டிக் பகுதியில் துருத்திக் கொண்டிருந்த ஒரு பூதாகரமான பனிக் குன்று பூகோள சூடேற்றத்துக்குப் புதிய சான்றாக உடைந்து கடலில் கரைந்து விட்டது. ஆர்க்டிக்கின் மிகப்பெரும் பனிப்புடைப்பான இப்பனி மதில் உருகல் நூற்றாண்டுகளாக படிப்படியாக ஏறிய வெப்பமும் 1960 களின் பின்னரான திடீர் வெப்பநிலை உயர்வுமே முக்கிய காரணம் என விஞ்ஞானிகள் கருத்துரைகின்றனர்.

2050 ஆம் ஆண்டளவில் உலக சனத் தொகை 9.1 பில்லியன் ஆகப் போன்றது. இதன் காரணமாக எரிபொருள், உணவு, நீர் வளம், நிலவளம் என்று சக்தி தேவை பன்மடங்கு அதிகரித்து பூகோள சூடேற்றத்தை மென்மேலும் மிகைப்படுத்தப்போகிறது. இதன் காரணமாக உலகம் பேரிடர்களை எதிர் கொள்ளப்போகின்றது.

வெப்ப அலைகளாலும் பெரும் புயல், சூறாவளி, வறட்சி, பெருமழை என்பவற்றாலும் கரையோர பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்குவதாலும் மாசடைந்த இரசாயன சேவைகள் கலந்த நீரால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படுவதாலும் நிலத்தடி நீர் வற்றிக் கொண்டே செல்வதனாலும் 40 வருடங்களுக்குள் மிக மோசமான ஆபத்துக்களை புவிவாழ் அங்கிகள் சந்திக்கப் போகின்றன.

இப்பூகோள சூடேற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பவை சூரியக்கதிர் வீசலும் புவியிலிருந்து மனித செயல்பாடுகளால் வெளியேற்றப்படும் வாயுக்களுமே ஆகும்.

சூரியனின் வெப்பநிலை சீராக சுற்றிலும் நிலை பெற பிரமாண்டமான ஒரு வாயுக்கோளம் பூமிக்குக்குடை பிடித்து வருகின்றது. இதனால் ஞாயிற்று கதிர்வீசலில் புவியியை வந்தடைகின்ற வெப்பக் கதிர்களில் குறிப்பிட்ட அளவு கதிர்கள் புவியை ஊடுருவுதல் தடை செய்யப்படுகின்றது.

புவியைச் சூழ காணப்படும் இவ் வாயுக் குடையில் வாயுக்களின் கொள்ளளவு கூடிக் குறையும்போது பூமியில் படும் பரிதியின் உஷ்ணமும் கூடி குறைகிறது. இந்த வாயு மண்டலத்தில் இயற்கையூட்டிய வாயுக்கள் தவிர காடழிப்பு, நகரமயமாக்கல், அதிகரித்த வாகன பாவனை,அகழ்வு நடவடிக்கைகள், அனுப்பப்பரிசோதனை, எரிபொருள்கள், தொழிற்சாலை புகை போக்கிகள் போன்றவற்றால் வெளியேற்றப்படும் CO, CH, CFC, SF போன்ற வாயுக்களுடன் நீராவி தூசு துணிக்கைகள் என்பனவும் மிகையாகும் போது புவி வெப்ப சேமிப்பு மிகுதியாக உஷ்ணமும் அதிகரிக்கின்றது.

காரணம், இவ்வாயுக்கள் சூரிய கதிர்ப்பின் வெப்பத்தை உறிஞ்சுவதாலும் புவிமேற்ப் பரப்பால் வளிமண்டலத்தை நோக்கி கதிர்க்கப்படும் எதிர் கதிர்க்கப்படும் (கதிர்வீசல்) வெப்பத்தைத் தடுப்பதாலும்வளிமண்டலவெப்பநிலையும்பூமி வெப்ப நிலையும் உயர்வடைகின்றது.

குளிர் பிரதேசங்களில் சில தாவரங்கள் வளர்ச்சிக்கு தேவையான வெப்பத்தைப் பேணும் பொருட்டு அமைக்கப்படும் கண்ணாடியால் ஆன வீடுகள் பச்சை வீடுகள்(கிரீன் கவுஸ்) எனப்படும் இந்த பச்சை வீடுகளின் கூரைகள் போன்று வெப்பத்தை அண்டவெளிக்கு கடத்தாமல் இவ்வாயுக்கள் போர்வையாக செயல்படுவதால் இவை பச்சை வீட்டு வாயுக்கள் எனப்படும்.

பச்சை வீட்டு வாயுக்கள் மிக அதிக அளவில் புவியிலிருந்து வெளியேற்றப் பட்டுகொண்டிருப்பது காபனீரொக்சைட்டு ஆகும். இது போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படுத்தப்படும் எரிபொருள்கள், வீடுகளில் பாவிக்கப்படும் எண்ணெய் விறகு, கழிவுப் பொருள்களில் இருந்து புறப்படும் எரிபொருள்கள், ஏனைய சுவட்டு எரிபொருள்கள், மின்சாரம், நீராவி உற்பத்தி நிலையங்கள் பயன்படும் நிலக்கரி என்பன எரிவதால் வளிமண்டலத்துக்குச் சேர்க்கப்படுகிறது.

காடழித்தலின்படி நேரடி விளைவு காபனீரொக்சைட்டு செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்தல் ஆகும் . இக் காபனீரொக்சைட் அதிகரிப்பே பூகோள சூடேற்றத்தை அதியுயர் வேகத்தில் மிகைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

பச்சை வீட்டு வாயுக்கள் அடுத்து குறிப்பிடத்தக்கது CFC (குளோரோ புளோரோ காபன்) இது குளோரின் கொண்ட சேர்வைகள், புரோமின் சேர்வைகள், நைதரசன் ஒட்சைட்டுகள், வெப்பத் தணிப்பு முறைகள் (AC) வெளியிடம் ஹலோ காபன்களிலும் வளிபதனிகள், வாசனைப் பொருள்களின் விசுறு கருவிகள் (Perfume)

**(12ஆம் பக்கம் பார்க்க)**

# பூகோள சூடேற்றமும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றின் மூலம் வெளியேற்றப் படுகின்றது. CFC உறைய வைக்கும் தொகுதிகள் குளிரூட்டிகள், எரசோல்கள், கரைப்பான்கள் என்பவற்றில் பாவிக் கப்படும் ஒரு பொதுவான தொழில் உற்பத்தி பொருளாகும்.

மொன்றியல் உடன்படிக்கை இணைத் (1987)தொடர்ந்து உலகளா விய ரீதியில் ஊகுஊ வெளியீட்டைத் தவிர்த்தலுக்காகக் காபன் நாற் குளோரைட்டு, மீதைல் குளோரோபோம், மீதல்புரோமைட்டு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த அல்லது குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. குளிர்சாதனப் பெட்டி, உற்பத்தித் துறை என்பவற்றில் CFC தவிர்க்கப்படுதலும் குறிப்பிடத்தக்கது.

பச்சை வீட்டு வாயுக்களில் ஒன்றான நைதரசன் அசேதன உர உற்பத்தி, சேதன பொருள்களின் தகனம், வாகன எரிபொருள்கள், விண்கலங்கள், ரொக் கெட்டுகளால் வெளியேற்றப்படும் புகை கள் என்பவற்றின் மூலம் வளிமண்ட லத்தில் சேர்க்கப்படுகின்றது. நைதரசன் பச்சை வீட்டு வாயுவாகக் காணப்பட்டு பூகோள சூடேற்றத்தில் பங்கு கொள்வது மட்டுமின்றி சுவாச தொகுதியைப் பாதிப்படையை செய்யக் கூடிய நச்சுத் தன்மையான ஒரு வாயுவாகும்.

பச்சை வீட்டு வாயுக்களின் மற்றும் ஒரு விளைவு ஓசோன் வெறிதாக்கல் ஆகும்.

வளிமண்டலத்தில் நடைபெறும் பிரதான மாற்றங்களை ஒன்று ஓசோன் படை குளிவடைந்து செல்வதாகும். இதற் குப் புவி மேற்பரப்பில் எல்லா வெளிப் போக்களும் வெளியேற்றப்படும் பச்சை வீட்டு வாயுக்களே காரணமாகின்றன.

இவ்வாறாக ஓசோன் படை குளிர் வடையும் போது (குறிப்பாகக் குளிர் காலத்தில்)முகில்கள் ஓசோன் படையில் உருவாகின்றது. இதன்போது நிகழும் இரசாயன மாற்றங்கள் பிரதானமானது CFC வாயு சூரிய, சூரிய சக்தியை உறிஞ் சிப் பிரிகையடைவதால் உருவாகும் குளோரின் அணுக்கள் ஓசோனை அழிவடைய செய்வதாகும். இது ஓசோன் வெறி தாக்கல் எனப்படும்.

இவ்வோசோன் வெறிதாக்கல் (அழிவு)காரணமாக புறவூதாக் கதிர்கள் வடிக்கப்படாது நேரடியாகப் புவியை வந்தடைவதால் மிகப் பாரதூரமான விளைவுகளை புவிவாழ் அங்கிகள் சந்திக்க வேண்டிய துப்பாக்கிய நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளன.

இனவிருத்தி பாதிப்படையும், உயிரின செல்கள் சிதைறும், தோல் நோய்கள் ஏற்படும், கண் படல நோய் கள் ஏற்படும், கான்சர் உருவாக வழி வகுக்கும்.

றுஉழு அறிக்கை ஒன்று, ஆசியா ஆபிரிக்க நாடுகளில் அசுத்த வாயுக் களை சுவாசிப்பதால் வருடாந்தம் ஒன்று 1.5 மில்லியன் மக்கள் மடிகின்றனர் என்று கூறுகின்றது. குறிப்பாக வீட்டு எரிபொருள்களாகப் பாவிக்கப்படும் விறகு, எண்ணெய்கள், நிலக்கரி ஏனைய எரிசக்தி முதல்கள் மூலம் வெளியாகும் அசுத்த வாயுக்களால் மடியும் இம்மக்கள் தொகையில் 8 லட்சம் பேர் குழந்தைகள் என்று சுட்டிக் காட்டுகின்றது.

21 ஆம் நூற்றாண்டின் முடிவில் பச்சை வீட்டு வாயுக்களின் பெருக்கத் தால் பூக்கோள உஷ்ணம் 6 வீதத்தால் ஏறிவிடும் என்று உலக உடல் நலப் பேரவை மதிப்பீடு செய்துள்ளது. சமீபத் தில் இப்பேரவை வெளியிட்ட புள்ளி விவரங்களின் சூழ்வெளிக் காலநிலை பாதிப்புக்களால் மனிதருக்கு ஏற்படும் 5 மில்லியன் வேறுபட்ட நோய்களில் 15,000 நபர்கள் ஒவ்வொரு ஆண்டும் மரணமடைகின்றனர் 2000 ஆண்டு களில் பூகோள சூடேற்றத்தால் கணிப் பிடப்பட்ட உடற்பாதிப்புகளும் இழப்புக ளும் 2030 ஆம் ஆண்டளவில் இரட்டிப் புக்கு மேலான எண்ணிக்கையில் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூகோள சூடேற்றம் காரணமாக இயற்கை சமநிலை குழப்பப்படுகின்றது. இதனால் உயிர் பல்வகை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. புவியில் இதுவரை எத்தனை வகை உயிரினங்கள் வாழ் கின்றன என்று கண்டுபிடிக்கப்பட வில்லை, எனினும் 5 -100 மில்லியன் உயிரின வகைகள் வாழ்கின்றன என கருதப்படுகிறது .ஆனால் 2050 ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் காணப்படும் உயிர் பல்வகைமையில் 0.25 வீதம் பூகோள சூடேற்றம் காரண மாக அழிந்து விடும் என ஜெர்னல் நேச்சர் (துழரசயெட யேவரசந) பற்றிய 2004 ஆம் ஆண்டு அறிக்கை தெரி விக்கின்றது. அதாவது அடுத்த நூற் றாண்டுகளில் உயிர் பல்வகைமையின் 10-43 வீதம் அழிவடைந்து விடும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

புவியின் வெளியேற்றப்படும் பச்சை வீட்டு வாயுக்கள் 25 வீதமானவை போக்குவரத்து சாதனங்கள் மூலமாக வெளியிடப்படுகின்றன. எரிசக்தி பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பச்சை வீட்டு வாயுக்கள் வெளிப் படுவதை 10 வீதம் குறைக்க முடியும் என்றும் சிறந்த வடிவமைப்பின் மூலம் 60 விதம் சக்தி சேமிப்பு சாத்தியமாகும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன .

இன்று மேற்குலக நாடுகள் பூகோள சூடேற்றத்தைக் குறைக்க பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கின் றன. இந்த வகையில் பல்வேறு மர நடுகைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் வாகனங்கள் குறைக்கப்பட்டு பொதுப் போக்குவரத்து சாதனங்கள் (Public Transpoer System) மட்டுமே பெருமளவில் சேவை யில் ஈடுபடுகின்றன. காற்று சக்தி சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பாரிய திட்டங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு உல களாவிய ரீதியில் பச்சை வீட்டு வாயுக் களின் வெளியேற்றத்தை Redusem, Re-use, Recycle ஆகிய மூன்று செயல் பாடுகளை மேற்கொள்வதற்கான நடவ டிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடியும்.

அதாவது பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றுத்தை இழிவாக்குதல் வெளியேறும் வாயுக்களை வளிமண் டலத்தில் சேர்க்காது மீள்பாவனைக்கு உட்படுத்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத் தல் ஆகிய செயற்பாடுகள் மூலமே எதிர்காலத்தில் மனிதர்கள் எதிர்கொள் ளப் போகின்ற பேரிடர்களை குறைக்க முடியும். எனவே ஒவ்வொருவரும் இயற் கையை நேசிப்பதுடன் அதன் சம நிலை யைப் பேண சிந்தித்து செயல்படுவதன் மூலம் வாழ்வதற்கு உகந்த ஒரே கோளான புவியைப் பேணிக்காப்போம்.

" நல்லதோர் வீணை செய்து
அதை நலங்கெடப்புழுதியில்
எறிவதுண்டோ?"

**வரதராசா வர்ஷனா,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# கல்லடி சிவானந்தா சாதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண மட்ட கர்நாடக சங்கீத போட்டியில் மட்டக்களப்பு , கல்லடி சிவானந்தா தேசிய கல்லூ ரி மாணவர்கள் ஆறு போட்டிகளில் கலந்து கொண்டு ஆறிலும் முதல் இடம்பிடித்து சாதனை நிலைநாட் டியுள்ளனர்.

தனி நடனம்,குழு நடனம் ,தனி இசை , தனி இசை – கீர்த்தனை , கர்நாடக இசை , குழு இசை போன்ற போட்டிகளில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





# விதை நெல், உரம் வழங்கி வைப்பு!

(அபு அலா )

உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் காப்போம் தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்த விதை நெல் மற்றும் உரம் போன்றவற்றை வழங்கும் நிகழ்வு (09) திருமலை புனித சென் ஜோசப் முதியோர் இல்லத்தில் இடம் பெற்றது.

காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பிரதீப்கரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக நிலாவெளி கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் கலந்து கொண்டார்.

புனித சென் ஜோசப் முதியோர் இல்ல வயல் காணிக்கான விதை நெல் மற்றும் உரம் போன்றவற்றை அதன் பொறுப்பாளர் அருட் சகோதரி லூஸினாவிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர், புனித சென் ஜோசப் முதியோர் இல்லத்தின் நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# சுகாதார மீளாய்வுக் கூட்டம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை சுகாதார பிராந்தியத்துக்கு உட்பட்ட நிறுவனத் தலைவர்களுக்கு இடையிலான மீளாய்வுக் கூட்டம் பணிமனையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (9) நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.ஏ வாஜித், வைத்திய அத்தியட்சகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச வைத்திய அதிகாரிகள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள் மற்றும் பணிமனையின் பிரிவு தலைவர்கள் பங்குபற்றினர்.



பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹீர் ஏற்பாடு செய்த குறித்த கூட்டத்தில் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சுகாதார கட்டமைப்பைக் கொண்டு செல்லும் விதம் தொடர்பாகவும் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளைத் தீர்த்து வினைதிறனான சேவையை வழங்குவது தொடர்பிலும் கட்டுமான பணிகளை துரிதப்படுத்துவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் நிறுவனத் தலைவர்களிடம் தத்தமது நிறுவனங்கள் தொடர்பான ஆலோசனை மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தொடர்பாகவும் தனித்தனியாக கேட்டறியப்பட்டது.

# தெலுங்கானாவில் பா.ஜ.க. ஆட்சி அமையும்: மத்திய அமைச்சர் அமித் ஷா நம்பிக்கை

தெலுங்கானாவில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் டிசம்பர் 3 ஆம் ஆம் திகதி முதல், பா.ஜ.க. ஆட்சி அமையும் என்று மத்திய அமைச்சர் அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா மாநிலம், ஆதிலா பாத்தில் பா.ஜ.க. சார்பில் நேற்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கலந்துகொண்டு, பாஜகவின் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி வைத்து உரையாற்றுகையில்.




பிரதமர் மோடியின் திறமையான ஆட்சி விரைவில் தெலங்கானாவில் அமையும். வாக்கு எண்ணிக்கை நடைபெறும் டிசம்பர் 3 ஆம் திகதி முதல் இங்கு பா.ஜ.கவின் ஆட்சிக்கொடி பறக்கும். தெலுங்கானாவில் பழங்குடி இனத்தவருக்காக அமையும் கிரிஜன பல்கலைக்கழகம் தாமதம் ஆனதற்கு முதல்வர் சந்திரசேகர ராவ்தான் காரணம். தெலங்கானாவில் கடந்த 10 ஆண்டுகளாக ஏழைகளின் பிரச்சினைகள் தீரவில்லை. விவசாயிகள், தலித்துகள் மற்றும் பழங்குடியினரின் பிரச்சினைகளும் கண்டுகொள்ளப்படவில்லை.

ஏழை குடும்பத் தலைவி ஒவ்வொருவருக்கும் மானிய விலையில் பிரதமர் மோடி காஸ் சிலிண்டர் வழங்கி வருகிறார். விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஆண்டுதோறும் 6 ஆயிரம் ஆயிரம் வரவு வைக்கப்படுகிறது. அயோத்தி பிரச்சினை தீர்வுக்குப் பிறகு அங்கு ஸ்ரீராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. காஷ்மீரில் அமைதி திரும்பியுள்ளது.

தெலுங்கானாதான் நாட்டின் முதன்மை மாநிலம் என்று முதல்வர் சந்திரசேகர ராவ் பெருமை பேசுகிறார்.

ஆனால் இங்கு விவசாயிகளின் தற்கொலையை அவரால் தடுக்க முடியவில்லை. ஒவைசி கட்சியுடன் அவர் ரகசிய கூட்டணி வைத்துள்ளார்.

தேர்தல்வந்துவிட்டால் காங்கிரஸ் காரர்களுக்கு திடீர் பாசம் வந்து விடும். அதனை நம்ப வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

# காவிரி நீர் கொடுக்காத கர்நாடகா மாநிலத்துக்கு உணவுகள் அனுப்புவதை நிறுத்த வேண்டும்!

## - நடிகை கஸ்தூரி கருத்து




காவிரி நீர் கொடுக்காத கர்நாடகா மாநிலத்துக்கு வழங்கி வரும் மின்சாரம், வணிகத்துக்காக அனுப்படும் உணவுப் பொருட்களை நிறுத்த வேண்டும் என்று நடிகை கஸ்தூரி கருத்து தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் பகுதிகளிலுள்ள கோயில்களுக்கு தரிசனம் மேற்கொள்ள சென்ற அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தி.மு.க. – காங்கிரஸ் கூட்டாளிகளாக இருப்பதால் காவிரி பிரச்சினையை அவர்கள் தீர்ப்பார்கள் என்பதில் நம்பிக்கையில்லை.

காவிரி நீர் கடல் வரைச் சென்று கலக்க வேண்டும். அப்போதுதான் அந்த நதிக்கு ஜீவநதி என்ற பெயர் பொருந்தும். ஆங்காங்கே அணைக் கட்டினால் அந்த நதி குளம், குட்டையாகி இறுதியில் சாக்கடையாக மாறிவிடும்.

கர்நாடகாவில் உள்ள பா.ஜ.க. உள்பட அங்குள்ள அனைத்துக் கட்சிகள், நமக்குதான் காவிரி சொந்தம் என அங்குள்ள மக்களை நம்ப வைத்துள்ளார். அங்கு படித்தவர்கள் கூட கிருஷ்ண சாகர் அணையைக் கட்டிய விஸ்வரேஸ ரய்யர் தான் காவிரியை தோண்டி எடுத்தார் என இன்னமும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு கேவலமான அரசியல் சூழ்நிலையில், வாக்கு அறுவடைக்காக செயல்படும் கர்நாடகா அரசியல்வாதிகளுக்கு நாம் கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றோம்.

ஆனால், இண்டியா கூட்டணியிலுள்ள தமிழக முதல்வர், தண்ணீர் தருகிறாயா இல்லை, கூட்டணியை கலைக்கட்டுமா என ஒரு கேள்வி கேட்காமல், திரை மறைவாகச் செயல்படுவோம் என தெரிவித்து வருகிறார். அதனால், காவிரி நீர் பிரச்சினைக்கு அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

தமிழகத் திரைத் துறையில் இன்று சில விநியோகஸதர்கள், வியாபாரிகளை பகைத்துக் கொள்ளக் கூடாது என தமிழ்த் திரைத்துறையினர் காவிரி பிரச்சினையில் ஈடுபடாமல் இருக்கின்றார்களா எனத் தெரியவில்லை. காவிரிக்காக குரல் கொடுத்த நடிகர் சத்யராஜ் போன்றவர்கள், தமிழக முதல்வருக்கு, போனில் தொடர்பு கொண்டால் சுலபமாக காவிரி பிரச்சனையை முடித்து விடலாம்.

ஆனால், அவர்கள் ஏன் செய்யவில்லை என எனக்குத் தெரியும், இருப்பினும் தெரியவில்லை என்று தான் நான் கூற முடியும்.

நடிகர் சித்தார்த் தி.மு.க. – காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். ஆனால், அவர் அவமானப்படுத்தப்பட்டபோது, அந்தக் கட்சியினர் கைவிட்டு விட்டனர். அவர் தமிழகத்துக்காகவும், காவிரிக்காகவும் குரல் கொடுத்திருந்தால், அவரது படத்தை இங்குள்ளவர்கள் பார்வையிட்டு அவரை கொண்டாடியிருப்பார்கள். தற்போது திரைத் துறையில் மத, சாதிய ரீதியாக பிளவுகள் ஏற்பட்டு வருகிறது. லியோ படத்தில் நடிகர் விஜய் பேசியுள்ள வசனத்தை அவர் பேசியிருக்க கூடாது.

முழு அடைப்பு போராட்டத்தை கர்நாடகா மாநில எல்லையில் நடத்தி, அவர்களுக்கு வழங்கப்படும் மின்சாரம், அனுப்பப்படும் உணவுப் பொருட்களை மற்றும் இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள வணிக செயல்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள காசா எல்லைகள்!

காசா எல்லைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையிலான போர் 5 ஆவது நாளை எட்டியுள்ளது. இந்தநிலையில் காசா மீதான வான்வழித் தாக்குதலுடன் தரைவழி தாக்குதலையும் அதிகரிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இஸ்ரேல் ராணுவம் அதிகமான துருப்புகளை தெற்கு இஸ்ரேல் பகுதியில் நிலை நிறுத்தியுள்ளது. கனரக இராணுவத் தளவாடங்களுடன் ரிசர்வ் படைகளும் அழைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், ஹமாஸ் தீவிரவாதிகள் முன்னோடியில்லாத தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து பல கொலைகள் நிகழ்ந்த காசா எல்லைப்பகுதிகளின் கட்டுப்பாட்டை மீட்டுவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அங்கு பல பகுதிகள் மற்றும் சாலைகளின் பாதுகாப்பை இஸ்ரேல் இராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதேபோல, அமெரிக்காவில் இருந்து அதிநவீன ஆயுதங்களுடன் வந்த முதல் விமானம் இஸ்ரேலின் நேவடிம் விமானநிலையத்தில் இறங்கியுள்ளதை அந்நாட்டு இராணுவம் உறுதி செய்துள்ளது. இந்த ஆயுதங்கள் ஒரு குறிப்பிடத்தகுந்த தாக்குதல் மற்றும் கூடுதல் பலத்தினை உருவாக்க பயன்படுத்தப்படும் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலுக்கு திடமான மற்றும் அசைக்கமுடியாத ஆதர வினை வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது. இது தொடர்பாக ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்ட அறிக்கையில், ஹமாஸ் தாக்குதல் தீய செயல். தேவைப்பாட்டால் இஸ்ரேலுக்கு கூடுதல் உதவிகளையும் வழங்கத் தயாராக இருக்கிறோம்.



இந்தச் சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் நாடுகள், அமைப்புகளுக்கு சொல்ல என்னிடம் ஒரு வார்த்தை உள்ளது. அது, வேண்டாம் என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் அந்தோனி பிளின்ங்கென் இஸ்ரேலுக்கு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்த வெள்ளை மாளிகையின் அறிக்கையின் படி, இஸ்ரேல் அரசு மற்றும் மக்களுடனான அமெரிக்க அரசின் ஆதரவினை அவர் உறுதிப் படுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் மற்றும் காசாவில் மக்களின் மரணங்களால் அதிகரித்து வரும் பேரழிவு கவலையைத் தருகிறது எனவும் இந்தப் போர், மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்காவின் கொள்கை தோல்வி அடைந்திருப்பதையே காட்டுகிறது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

கோலன் ஹைட்ஸ் பகுதியில் ரொக்கெட் வீசி நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவம் சிரியா பகுதிகளிலும் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

சிரியாவிலிருந்து இஸ்ரேலை நோக்கி பல ரொக்கெட்டுகள் ஏவப்பட்டன. இவைகளில் சில இஸ்ரேலின் எல்லை பகுதிகளில் வெட்ட வெளியில் விழுந்துள்ளன என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலுக்கு எந்த குழுவினரையும் இராணுவம் குற்றம் சாட்டவில்லை.

இஸ்ரேலிய போர் விமானங்கள் இரவு முழுவதும் காசாவின் 200 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி உள்ளன. இதன் மூலம் ஹமாஸின் மையங்கள் உட்பட பல முக்கிய கட்டிடங்கள் தாக்கப் பட்டுள்ளன. தாக்கப்பட்ட வீடுகளில் ஒன்று ஹமாஸ்களின் ஆயுதக்குழு தலைவரான முகம்மது டெய்ஃபியின் தந்தையின் வீடு என பாலஸ்தீன செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட் டுள்ளன என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தப் போரினால் காசா பகுதிகளில் இதுவரை ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளனர். பலர் தெருக்களிலும் பாடசாலைகளில் தங்கியுள்ளனர் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்!



ஆப்கானிஸ்தானின் ஹெராத் நகருக்கு அருகே இன்று காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகி உள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஹெராத் நகருக்கு அருகே கடந்த 7 ஆம் திகதி மிகப் சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. அடுத்தடுத்து இருமுறை ஏற்பட்ட நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவு கோலில் 6.3 ஆக பதிவாகின. அதோடு, தொடர் நில அதிர்வுகளும் ஏற்பட்டன. இதன் காரணமாக பல கிராமங்கள் தரைமட்டமாகி, 2 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், அதே ஹெராத் நகருக்கு 28 கிலோ மீட்டர் தொலைவில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று இன்று ஏற்பட்டுள்ளது. இதுவும் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகி உள்ளது. கடந்த நிலநடுக்கத்தின் பாதிப்பில் இருந்து அந்தப் பகுதி மக்கள் இன்னும் மீண்டு வராத நிலையில் மீண்டும் ஒரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பது மிகப் பெரிய சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.